




திருப்பத்தூரில் – கழக வடக்கு மண்டல வாக்குச்சாவடிக் குழு பயிற்சி மாநாட்டில் கலந்துகொள்ள ரயில் மூலம் ஜோலார் பேட்டை செல்வதற்கு, நேற்று சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ஏராளமான பொதுமக்கள் மற்றும் பெண்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, மதுரை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் 2 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**15.02.2026 ஞாயிற்றுக்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 10.30 மணி | பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் சிலைகள் திறப்பு விழா | ஆலடிக்குமுளை, பட்டுக்கோட்டை. |
| காலை 11.00 மணி | மாநில வர்த்தக அணி துணைத் தலைவர் பழஞ்சூர் செல்வம் அவர்களின் இல்லத் திருமண விழா | வசந்தம் மஹால், பட்டுக்கோட்டை. |
| மதியம் 12.00 மணி | பட்டுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் திறப்பு விழா | பட்டுக்கோட்டை. |
| மதியம் 01.00 மணி | முன்னாள் அமைச்சர் அழகு திருநாவுக்கரசு அவர்களின் சிலை திறப்பு விழா | எடமேலையூர், மன்னார்குடி. |
| மாலை 06.00 மணி | தஞ்சாவூர் மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு | செங்கிப்பட்டி, தஞ்சாவூர். |

**16.02.2026 திங்கள்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 09.30 மணி | நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா | புதுக்கோட்டை. |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 13.02.2026

கலைஞர் 100 1924 - 2023









மதுரையில் மாவட்ட–மாநகர – மாநில அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நேற்று (14/02/2026) கழக இளைஞர் அணிச் செயலாளர் –துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விருதுநகர் தென் மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு வெற்றிகரமாக நடைபெற உழைத்த நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்து, அவர்களுக்கு நினைவுப்பரிசுகளை வழங்கி, குழுப் புகைப்படம் எடுத்துக்கொண்டதுடன், விரைவில் நடைபெறவுள்ள மேற்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பிற்கான பணிகளைச் சீரிய முறையில் மேற்கொள்ளும்படி, ஆலோசனை வழங்கினார் .



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் சமுதாய வளைகாப்பு விழாவில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு அவர்களை வாழ்த்தினார். உடன் ஒன்றிய குழு பெருந்தலைவர் திருமதி. ஹேமலதா ஞானசேகரன், ஒன்றிய செயலாளர் டி.குமார், பேரூர் செயலாளர் என்.எஸ். பாரி வள்ளல், பேரூராட்சி மன்ற தலைவர் பொன் சசிகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.


